

ஃபெஞ்சல் புயல் கனமழை பாதிப்புகளை ஆய்வு செய்ய கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த மத்தியக் குழுவினரிடம் கடலூர் மேற்கு மாவட்டம் சார்பில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் புயல் மற்றும் கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பயிர்கள் , சாலைகள், மேம்பாலங்கள், வீடுகள்,கால்நடைகள் என ஏற்பட்டுள்ள சேதத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென கோரிக்கை மனு வழங்கினார். உடன் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் அண்ணா கிராமம் ஒன்றிய கழகச் செயலாளர் வி.கே. வெங்கட்ராமன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன் தலைமை!

# குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் மாபெரும் இரண்டாம் ஆண்டு கிரிக்கெட் போட்டி!

## சிதம்பரம் ந.தியாகராஜன் முன்னிலை, உளுந்தூர்பேட்டை மு.நஜீர்அகமது ஏற்பாடு!

குவைத்,டிச.10-

குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோரின் வழிகாட்டுதலின்படி குவைத் மண்டலத்தில் கழக அயலக அணி குவைத் இளைஞர் அணி சார்பில் திராவிட முன்னேற்ற கழகம் இளைஞர் அணி செயலாளர் மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சரும்,தமிழ் நாடு துணை முதல்வரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது…

“Chinnavar Birthday Celebration Cup2024” எனும் தலைப்பில் நடைபெற்ற இந்தப் போட்டிகளை திமுக அயலக அணியின் குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் முன்னிலையில், குவைத் மண்டல இளைஞர் அணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது மற்றும் துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்…

அமைப்பின் அவைத்தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர் சேகரை வெ.செல்லதுரை, தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி.தியாகராஜன், இளைஞர் அணி துணைச் செயலாளர் பரங்கிப்பேட்டை ம. நசுருதின் முகம்மது, மண்டல இளைஞரணி செயலாளர் திருவாரூர் திருவரங்கன், மேற்கு மண்டல துணை அமைப்பாளர் திருவாரூர் கார்த்திகேயன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்…

இந்த 20 ஓவர் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், ப்ளூ11, தமிழ் தலைவான்ஸ், குவைத் தமிழ் ஃப்ரெண்ட்ஸ், ஸ்ட்ரைக்கர்ஸ் 11, சுறா ஸ்டார்ட்ஸ், ரெட் ஈகல்ஸ், நியூ யாக்கர்ஸ், MKCC, பெஸ்ட் 11, பெட் ஸ்பார்ட்டன்ஸ், ABJ ஈகல்ஸ், TN63SVG, அல் அர்ஃபாஜ் XI, லங்கா ரைபியன்ஸ், பிளேயர்ஸ் XI சால்மியா ஆகிய 16 அணிகளின் வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினார்கள்.

இதில் லங்கா ரைபியன்ஸ் அணி அனைத்துப் போட்டிகளில் வென்று முதல் பரிசை தட்டி சென்றது. பெட் ஸ்பார்ட்டன்ஸ் அணி இரண்டாம் பரிசை வென்றது…

ராதாபுரம் சுதாகர், உளுந்தூர்பேட்டை யுவராஜ், எ. கோட்டை மோதிலால், புலியூர் குமார், பெரும்புலியூர் ராஜ ராஜன், கன்னியாகுமரி தாமஸ், திருக்காட்டுப்பள்ளி அருண் ராஜ் ஆகியோர் நடுவர்களாக இருந்து போட்டிகளை நடத்தினர்.

அன்று மாலை நடைபெற்ற விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு நினைவு கோப்பை மற்றும் ரொக்க பரிசுகள் வழங்கப்பட்டன…

இளைஞர் அணி துணை செயலாளர் உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற விழாவிற்கு தி.மு.க. அயலக அணி குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன், அவைத் தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இளைஞரணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நஜீர்அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்

அமைப்பின் இணைச்செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா, துணைச் செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், தொழிலாளர் நலன் அணி செயலாளர் திருவடத்தனூர் ரபீக், இளைஞர் அணி துணைச் செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின், பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள் மருதூர் பிரேம்குமார், அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், உரத்தூர் மு.நாகேந்திரன், குடந்தை டி.மணிகண்டன், கூத்தாநல்லூர் சாகுல் ஹமீது மற்றும் தமிழ் அமைப்புகளான கலகலப்பு நண்பர்கள் குழு, குவைத் தமிழ் ஓட்டுநர் சேவை மையம், மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழர்கள் வாழ்வுரிமை இயக்கம், காயிதே மில்லத் பேரவை நிர்வாகிகளும், அலி டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் முகமது அலி, வெல்டன் அமீர் மற்றும் ஏராளமான தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கூட்டணி கட்சி நண்பர்களும் குவைத் வாழ் தமிழ் உறவுகளும் பெரும் அளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவின் நிறைவாக அமைப்பின் தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப் அலி நன்றி கூறினார்

### ‘ஃபெஞ்சல்’ புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் மாவட்ட

# பொதுமக்களுக்கு ரூ.68.87 இலட்சத்தில் வெள்ள நிவாரணப் பொருட்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. – அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அனுப்பி வைத்தனர்!

நாமக்கல், டிச. 10 -

ஃபெஞ்சல்’ புயல்காரணமாக பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் பொதுமக்களுக்குமழையின்காரணமாக வீடுகள் சேதமடைந்த பயனாளிகளுக்கு ரூ.68.87 இலட்சம் மதிப்பிலான வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்மருத்துவர் ச.உமா, தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக்கழகச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும்,நாமக்கல்மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமானகே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நிவாரண உதவித்தொகை மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் மழையினால்வீடுகள்சேதமடைந்த பயனாளிகளுக்கு வீடுகளை சீரமைக்க 10 நபர்களுக்கு தலா ரூ.4,000/ மற்றும்1நபருக்குரூ.8,000/என மொத்தம் ரூ.48,000/ நிவாரண உதவித் தொகையையும்,10கிலோஅரிசி,1கிலோ பருப்பு,1கிலோஉப்பு,1லிட்டர் சமையல் எண்ணெய், 1 பாக்கெட் பிஸ்கட், 1 பாக்கெட் பிரட், 1 பெட்டி மளிகை பொருட்களின் தொகுப்பு, 2 சேலைகள், 2 வேட்டிகள், 1 பெட்டி பாத்திரங்கள், 1பாய், போர்வை, கம்பளி, கொசுவலை, படுக்கை விரிப்பு மற்றும் 1 வாளி உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பொதுமக்களுக்கு வழங்கி ஆறுதல் கூறினார்.

முன்னதாக, நாமக்கல் மாவட்டநிர்வாகம்சார்பில் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டபொதுமக்களுக்கு ரூ.10.33 இலட்சம் மதிப்பில் பல்வேறு வகையானநிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் கனரக வாகனங்களை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்ச.உமாதலைமையில், மாநிலங்களவை உறுப்பினரும்,நாமக்கல்மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமானகே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் ‘ஃபெஞ்சல்’ புயல்காரணமாக பாதிக்கப்பட்ட விழுப்புரம் மற்றும் கடலூர் பொதுமக்களுக்கு 10கனரகவாகனங்கள்மூலம் மொத்தம்ரூ.68.87இலட்சம் மதிப்பில் அரிசி, சமையல் எண்ணெய்,பருப்பு,மளிகை பொருட்கள், பால் பவுடர், சர்க்கரை, ரொட்டி, சோப், தீப்பெட்டி, பக்கெட், மக் உள்ளிட்ட பல்வேறு வகையான நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில்இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், முன்னாள்சட்டமன்றஉறுப்பினர் கே.பி.இராமசுவாமி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு அலுவலர் த.முத்துராமலிங்கம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சியில் 2024–2025 ம் ஆண்டு மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 11 லட்சம் மதிப்பீட்டில் சாமளாபுரம் பேரூராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் பணி பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி தலைமையில், பேரூர் கழக செயலாளர், 5வது வார்டு கவுன்சிலர் பி.வேலுச்சாமி முன்னிலையில் நடைபெற்றது. இதில் பேரூராட்சி துணைத் தலைவர் குட்டி வரதராஜன், செயல் அலுவலர் சிவக்குமார், கவுன்சிலர்கள் மைதிலி பிரபு, நித்யா ஆரோக்கிய மேரி, பட்டீஸ்வரன், பூங்கொடி சண்முகம், மேனகா பாலசுப்பிரமணியம், வினோஜ் தயாளன், பிரியா செந்தில், பெரியசாமி, துளசிமணி ஆறுமுகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீ ராம் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். அப்போது நகர அவைத்தலைவர் மாணிக்கம், ராஜமாணிக்கம், ராஜேந்திரன், செல்வராஜ், ரவி, அருண்குமார், செல்வமணி, நாகராஜ், வேலுமணி, சிவராமன் மற்றும் கழக நிர்வாகிகள், வி.சி.க.வினர் கலந்து கொண்டனர்.



திருவெறும்பூர் தொகுதியில் திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலை பகுதியில் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி மக்கள் குறைகளை கேட்டறிந்தார்.

### திருவெறும்பூர் தொகுதி

# பொன்மலை பகுதியில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறைகளைக் கேட்டறிந்தார்!

திருச்சி, டிச.10-

திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட பொன்மலை 45 மற்றும் 46-வது வார்டு பகுதிகளில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இந்த மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தமிழக பள்ளிகள் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று அவர்கள் குறைகளைக் கேட்டு அறிந்தார்.

மேலும் இது குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறுகையில், கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த பொன்மலை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் ஒன்பது கோடியே 23 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி, அங்கன்வாடி, சமுதாயக்கூடம், ஊரக சுகாதார நிலையம் கட்டுதல், நாய்கள் கருத்தடை மையம் அமைத்தல், உட்பட பல்வேறு பணிகளை இந்த மூன்று ஆண்டுகளில் முடித்து அதை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாகவும், எனினும் பொது மக்களின் அனைத்து குறைகளையும் தீர்க்க முடியுமா என்றால் அதற்கு ஒரே தீர்வு இந்த மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் தான் என்றும்,

இந்த மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக நானும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் பொதுமக்களாகிய உங்களை நேரில் சந்தித்து அனைவரும் ஒன்று சேர்ந்து உங்களின் குறைகளை ஒரே இடத்தில் கேட்டறிந்து அதை அரசு அதிகாரிகளிடம் எடுத்துரைத்து அதற்கு உடனடி தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட கூட்டம் தான் இந்த மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் என்றும், தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தல் படி இந்த மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடத்தப்படுவதாகவும் இந்தக் கூட்டத்தில் கொடுக்கப்படும் மனுக்கள் இந்த முகாமில் கலந்து கொள்ளும் அரசு அதிகாரியிடம் உடனடியாக வழங்கப்பட்டு அதற்கான தீர்வு கேட்கப்பட்டு வெகு விரைவில் முடிக்கப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் எடுத்துரைத்தார்

மேலும் இந்நிகழ்வில் மாநகர செயலாளரும், மண்டல குழு தலைவருமான மதிவாணன், பொன்மலை பகுதி செயலாளர் தர்மராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், சீதாலட்சுமி மற்றும் வட்ட செயலாளர்களான பரமசிவம், முருகன், தமிழ்மணி, முருகானந்தம் உட்பட அரசு உயர் அதிகாரிகள், அனைத்து துறையின் அதிகாரிகள் என இந்த மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# நாமக்கல் ஒன்றிய தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள்!

நாமக்கல், டிச. 10 -

துணை முதலமைச்சரும், விளையாட்டுத் துறை அமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமானகே.ஆர்.என். ராஜேஸ்குமார் அறிவுறுத்தலின்படி, நாமக்கல் பொன் விழாநகரில்உள்ளஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில்பள்ளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும்நிகழ்ச்சி நடைபெற்றது.

நாமக்கல் ஒன்றியக் கழகச் செயலாளரும், அட்மா குழுத் தலைவருமான வி.கே.பழனிவேல் தலைமையில் பள்ளி குழந்தைகளுக்கு, இனிப்புகள் மற்றும் நோட் புக், பேனா, பென்சில் முதலியவை வழங்கப்பட்டது.

அதே போல் ஒன்றிய பொருளாளர் இந்திரா நகர் ச.கணேசன் ஏற்பாட்டில், நாமக்கல் ஒன்றியம் வசந்தபுரம் ஊராட்சி நல்லூர் மனவளர்ச்சி குன்றிய ஆதரவற்ற குழந்தைகள் கல்வி கற்கும் பள்ளி சுமார் 65குழந்தைகளுக்குஅசைவ உணவும், எர்ணாபுரம்அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 100 நபர்களுக்கு பால், பன் மற்றும் இனிப்புகள், நாமக்கல் மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு, தண்ணீர் பாட்டில் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் நலங்கிள்ளி, ஒன்றிய துணைச் செயலாளர் வெங்கடாசலம், அருள், ஒன்றிய பொருளாளர் இந்திரா நகர் ச.கணேசன், மாவட்ட பொறியாளர்அணிஅமைப்பாளர் பா.கிருபாகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.கலைவாணன், மாவட்டப் பிரதிநிதி மணி, மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர்பைரோஸ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பார்த்தசாரதி மற்றும் ஒன்றிய சிறுபான்மை அணி துணை அமைப்பாளர்மௌலானா, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுந்தரராஜ், ரகுபதி, செல்வராஜ், பூபதி பாலசுப்ரமணி, வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் ஜெகன், தாஸ் சக்தி, குமார், நபில், செந்தில், ஆனந்தசூர்யா, ராம்குமார், கண்ணன்,ஸ்டாலின்,அருள் குமார், லோகு, புஷ்பராஜ், தாஸ் நித்திஷ்குமார் மற்றும் வினோத் ராஜா, நவீன் ராஜ் மற்றும் கழக உடன்பிறப்புகள் என பலரும் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகள் வகுரம்பட்டி ஊராட்சி கழக நிர்வாகிகள் செய்திருந்தனர்.




துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச்செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி ஆலோசனைப்படி நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.எஸ்.சண்முகம் தலைமையில் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தம்மணம்பட்டி கிராமத்தில், கழகக் கொடி ஏற்றி, ஏழை, எளிய மகளிர் 500 பேருக்கு இலவச புத்தாடை மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது. உடன் ஒன்றிய நிர்வாகிகள் ரங்கநாதன், சின்னப்பெருமாள், மோகன், முன்னாள் ஒன்றியச் செயலாளர்கள் லதா, பச்சியப்பன், பொன்னுசாமி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.வி. ரங்கப்பன்

### டிசம்பர் 10 (2001)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஈரோடு ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.என்.புதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 1970 முதல் மூன்று முறை ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1998ல் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அத்துடன் கோவை–பெரியார் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைப் பொதுச்செயலாளராகவும் – ஈரோடு நிலவள வங்கித் தலைவராகவும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.